அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை: 05/2002

எனது இல.தா/IV/2/2/1(2)
அரசாங்க நிர்வாக,முகாமைத்துவ,
மறுசீரமைப்பு அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு.07
2002 ஆகஸ்ட் மாதம் 23 ஆந் திகதி

அமைச்சின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள்,
திணைக்கள தலைவர்கள் யாவருக்கும்

**தாபன விதிக்கோவையில் V ஆம் அத்தியாயத்தில்**
**5 ஆம் பிரிவை திருத்தம் செய்தல்.**
**55 வயதிற்கு மேல் சேவை நீடிப்பு செய்தல்.**

1996.08.30 ஆந் திகதிய 27/96 ஆம் இலக்க மற்றும் 1997.09.25 ஆந் திகதிய 21/97 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகளின் மூலமாக செய்யப்பட்ட திருத்தங்களும் அடங்கலாக தாபன விதிக்கோவையில் V ஆம் அத்தியாயத்தில் 5 ஆவது பிரிவிற்குப் பதிலாக பின்குறிப்பிடப்படும் பிரிவை 2002 யூலை 31 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பதிலீடு செய்யப்படுகின்றது.

02. 5 - ஓய்வு பெறச் செய்வித்தல்.

5:1 அரசு அலுவலரொருவரினது ஓய்வுபெறச் செய்வித்தலானது அரசின் மற்றும் நீதித்துறை அலுவலர்களினது (ஓய்வு பெறச் செய்வித்தலின்) கட்டளைச் சட்டமும், அதன் கீழ் விதிக்கப்பட்ட சட்டங்களின் கீழும் நிருவகிக்கப்படுகின்றது.

5:2 அலுவலரொருவரினது விருப்புக்குரிய ஓய்வுபெறச் செய்விக்கும் வயது 55 ஆகும்.

5:3 கீழ் குறிப்பிடப்படும் உபபிரிவுகளில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளின் கீழ் வருடாந்தம் சேவை நீடிப்பின்றி 57 வயது வரை அலுவலரொருவருக்கு சேவையில் ஈடுபடுவதற்கு இயலும்.

5:3:1 55 வயதை கடந்த அலுவலரொருவருக்கு தமது விருப்பப்படி குறைந்த பட்சம் மூன்று மாதத்திற்கு முன்பு சம்பந்தப்பட்ட நியமன அதிகாரிக்கு அறிவிப்பு செய்து ஓய்வு பெறுவதற்கு இயலும்.

5:3:2 55 ஆவது வயதை கடந்த அலுவலரொருவரினது வினைத்திறமையும் சேவை நிலைமையும் திருப்திகரமற்றது என நியமன அதிகாரி தீர்மானிப்பாராயின், மூன்று மாத கால அவகாசத்தின் பின்பு ஓய்வு பெறச் செய்விக்கும் உரிமை நியமன அதிகாரியை சார்ந்திருக்கும்.

5:4 சேவை நீடிப்பு சம்பந்தமாக நியமன அதிகாரியினால் வழங்கப்பட்டுள்ள கட்டளை தொடர்பாக, அந்தக் கட்டளைக்கு பாத்திரமான அலுவலரினால் முன்வைக்கப்படும் மேன்முறையீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் பேரில் உரியவாறு மேன்முறையீட்டு அதிகாரத்துவத்தை வகிக்கும், அமைச்சரவைக்கு அல்லது அரசு சேவை ஆணைக் குழுவிற்கு அந்தக் கட்டளையை நிராகரிப்பதற்கோ அல்லது மாற்றுவதற்கோ அல்லது இரத்துச் செய்வதற்கோ அதிகாரம் உள்ளது.

5:5 பின்குறிப்பிடப்படும் ஏற்பாடுகளுக்கமைய சேவையின் தேவைக்கேற்ப அரசு அலுவலரொருவரினது சேவை 57 வயதிலிருந்து 60 வரை நீடிப்பு செய்யும் அதிகாரம் நியமன அதிகாரியை சார்ந்திருக்கும்.

5:5:1 57 வயதின் பின்பு சேவையாற்றுவதற்கு எண்ணும் அலுவலரொருவர் தமது சேவையை நீடிப்பு செய்வதற்காக விண்ணப்பப் பத்திரத்தை திணைக்கள தலைவர் ஊடாக, நியமன அதிகாரியிடம் வருடாந்தம் முன் வைத்தல் வேண்டும். முதலாவது சேவை நீடிப்புக்கான கோரிக்கையை அலுவலரினது 57 ஆவது வயதை அடையும் திகதிக்கு ஆறு மாதத்திற்கு முன்பும் , அதன் பிறகு 60 வயது வரையிலான சேவை நீடிப்புக்கான கோரிக்கைகளை சேவை நீடிப்பு ஆரம்பிக்கும் திகதிக்கு மூன்று மாதத்திற்கு முன்பும் முன்வைத்தல் வேண்டும். அந்தக் கோரிக்கைகள் தொடர்பாக கவனத்திற் கொண்டு பார்த்து நியமன அதிகாரியினால் சேவை நீடித்தல் வழங்குதல் தொடர்பாக தீர்மானித்தல் வேண்டும்.

5:5:2 நியமன அதிகாரி அமைச்சரவையாகும் சந்தர்ப்பத்தில் 5:5:1 உபபிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உரிய திகதிக்கு முன்பு உரிய அமைச்சின் செயலாளரிடம் சேவை நீடிப்பிற்கான கோரிக்கையை முன்வைத்தல் வேண்டும். செயலாளரினால் சம்பந்தப்பட்ட அமைச்சரை விசாரித்து சேவை நீடிப்பை வழங்குதல் தொடர்பாக தீர்மானித்தல் வேண்டும். சேவை நீடிப்பை நிராகரிப்பதென்றால் சம்பந்தப்பட்ட அமைச்சர் அந்த தீர்மானத்தை அமைச்சரவைக்கு முன் வைத்தல் வேண்டும்.

5:5:3 அலுவலரொருவரினது சேவை நீடிப்பு செய்யும் கால எல்லையை அவருக்கு அறிவிக்க வேண்டியதுடன், ஒரு முறைக்கு ஒரு வருடத்திதற்கு மேலான காலத்திற்கு சேவை நீடிப்பு செய்தலாகாது.

5:6 ஒழுக்காற்று கட்டளையாகாவிட்டால், அலுவலரொருவரினது ஓய்வூதியத்திற்காக கணக்கில் எடுக்கப்பட வேண்டிய சேவைக்காலம் பத்து வருடத்திற்கு மேல் குறைவாக இருப்பின் பத்து வருடம் பூர்த்தியாகும் திகதி அல்லது அலுவலரொருவரினது 60 வயது பூர்த்தியாகும் திகதி ஆகிய இரண்டு திகதிகளில் முன்னராக வரும் திகதிக்கு முன்பு மேற்படி ஏற்பாடுகளின் கீழ் அலுவலரொருவரை ஓய்வு பெறச் செய்விப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரி நடவடிக்கை எடுத்தலாகாது.

ஒப்பம்: டிட்டா விமலசிறி
செயலாளர்,
அரசாங்க நிர்வாக, முகாமைத்துவ,
மறுசீரமைப்பு அமைச்சு